1975 ஏப்ரல் 8]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, சற்றேறப்ப 120 கோடி ரூபாய்க்கு பல்வேறு தலைப்புகளில் ஆளுநர், அமைச்சர்கள், மதுவிலக்கு, வறட்சி நிவாரணம்—இப்படிப்பட்ட வகைகளில் ஒதுக்கப்படுகின்ற இந்த மானியக் கோரிக்கைகளின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் அளித்துள்ள சில கருத்துக்களுக்கு என்னுடைய விளக்கங்களை வைத்திட விரும்புகிறேன்.

நம்முடைய நண்பர் திரு. ஏ. கே. சுப்பையா அவர்கள் அமைச்சர்கள் மாவட்டங்களில் அதிக அளவில் சுற்றுப்பயணங்களை மேற்கொள்ள வேண்டுமென்ற முறையீட்டை அவருடைய உரையின் மீது இங்கே எடுத்துச் சொன்னார்கள்.

நம்முடைய பழைய காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் அமைச்சர்கள் தலைமைச் செயலகத்தில் அதிக நாட்கள் இருந்திடவேண்டும்; பொதுமக்களுடைய முறையீடுகளைப் பெற்று பரிசீலிக்கவும், ஆவன செய்யவும் அதுவே உகந்த வழி என்று குறிப்பிட்டார்கள்.

அமைச்சர்களைப் பொறுத்து நான் கடந்த ஆண்டிலேயே சில விவரங்களைத் தந்திருக்கிறேன்.

அவர்கள் 1974–75 இல் தலைமைச் செயலகத்தில்—சென்னையில் இருந்த நாட்களைப் பார்த்தால்—என்னைப் பொறுத்தவரையில் முதலமைச்சர் 1974–75 இல் சென்னையில் 299 நாட்கள் இருந்திருக்கிறேன்.

கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர்—நாவலர் அவர்கள் 266 நாட்கள் சென்னையில்—தலைநகரில் தங்கியிருந்திருக்கிறார்கள்.

மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் பேராசிரியர் அவர்கள் 304 நாட்கள் இருந்திருக்கிறார்கள்.

பின்தங்கிய வகுப்பினர் நலத்துறை அமைச்சர் திரு. என். வி. என். அவர்கள் 322 நாட்கள் இருந்திருக்கிறார்கள்.

பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. ப. உ. சண்முகம் அவர்கள் தலைநகரத்தில் 280 நாட்கள் இருந்திருக்கிறார்கள்.

உணவு—கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. செ. மாதவன் அவர்கள் 261 நாட்கள் தங்கியிருந்திருக்கிறார்கள்.

தொழில்துறை அமைச்சர் திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா அவர்கள் 233 நாட்கள் சென்னையிலே, தலைநகரத்திலே இருந்திருக்கிறார்கள்.

வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. ஆதித்தனார் அவர்கள் 316 நாட்கள் சென்னையிலே இருந்திருக்கிறார்கள்.

வருவாய்த்துறை அமைச்சர்—திரு. அன்பில் தர்மலிங்கம் அவர்கள் 140 நாட்கள் சென்னையில் இருந்திருக்கிறார்கள்.

உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மன்னை நாராயணசாமி அவர்கள் 180 நாட்கள் சென்னையிலே இருந்திருக்கிறார்கள்.

தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. க. இராசாராம் அவர்கள் 235 நாட்கள் சென்னையில் தங்கி இருந்திருக்கிறார்கள்—இது ஆச்சரிய மான விஷயம்.

சமூகநலத்துறை அமைச்சர் திரு. சி. வி. எம். அண்ணாமலை 251 நாட்கள் சென்னையில் இருந்திருக்கிறார்கள்.

வணிக வரித்துறை அமைச்சர் திரு. ஓ. பி. இராமன் அவர்கள் 274 நாட்கள் தலைநகரில் தங்கி இருக்கிறார்கள்.

போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. இராமச்சந்திரன் அவர்கள் 212 நாட்கள் தங்கியிருக்கிறார்கள்.

அறநிலையத்துறை அமைச்சர் திரு. கண்ணப்பன் அவர்கள் 222 நாட்கள் தங்கியிருக்கிறார்கள்.

தாழ்த்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு. இராசாங்கம் அவர்கள் 215 நாட்கள் தலைநகரில் தங்கி இருந்திருக்கிறார்கள்.

ஆகவே, அமைச்சர்கள் தலைநகரத்திலே தங்குவதில்லை, அவர்கள் வெளியூர்களிலேயே சுற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்கின்ற, பொன்னப்ப நாடார் அவர்கள் எடுத்து வைத்த வாதம் அவ்வளவு பொருத்தமுடைய தாக இல்லையென்பதற்காகத்தான் நான் இதை எடுத்துக் கூறினேன்.

தொடக்கத்திலேயே, நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் பொன்னப்ப நாடார் அவர்கள் தேர்தலைப் பற்றி.....................

திருமதி த. ந. அனந்தநாயகி : அமைச்சர்கள் தலைநகரத்திலே இருக்கிறார்களே தவிர, தலைமைச் செயலகத்திற்கு வருவதில்லையென்பது தான் முக்கியமான குற்றச்சாட்டு.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அம்மையார் அவர்கள் இல்லத்திலேயே வந்து பார்க்கின்ற அளவுக்கு உரிமை படைத்தவர்கள். ஆகவே, அந்தக் கவலை தேவையில்லை.

நம்முடைய பொன்னப்ப நாடார் அவர்கள் தேர்தல்களைக் குறித்துச் சொன்னார்கள். அவசர அவசரமாக வாக்காளர்கள் பதிவு செய்யப்பட்டு காரியங்கள் நடைபெற்றிக்கின்றன. அதன் காரணமாக வாக்காளர்களைப்

1975 ஏப்ரல் 8] [டாக்டர் மு. கருணாநிதி]

பதிவு செய்வதிலே சில குறைபாடுகள் ஏற்பட்டிருக்கக்கூடும். என் இவ்வளவு அவசரமாக இந்தக் காரியங்களைச் செய்யவேண்டுமென் றெல்லாம் அவர்கள் கேட்டார்கள்.

இது மாநில அரசினுடைய செயல் அல்லவென்பதையும் மாநில அரசிற்கு மத்தியிலே இருக்கிற தலைமைத் தேர்தல் ஆணைக்குழு பிறப் பிக்கின்ற கட்டளைகளை நிறைவேற்றுகின்ற வகையிலேதான் நாம் நடக்க வேண்டியவர்களாக இருக்கிறோம் என்பதையும் நான் கூற விரும்பு கிறேன்.

ஆனாலும் அதன் காரணமாக வாக்காளர்களுடைய தொகை குறைந்து விட்டதாக நாம் எண்ணிவிடக்கூடாது. 1971-ம் ஆண்டு தமிழ்நாடு முழுவதும், எல்லா மாவட்டங்களிலும் உள்ள வாக்காளர்களுடைய எண்ணிக்கை 2,30,64,858 ஆகும். இப்பொழுது, 42,67,214 வாக்காளர் கள் கூடுதலாகப் பதிவு செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆக, 1975-ம் ஆண்டு வாக்காளர் கணக்கெடுப்பின்படி 2,73,32,072 பேர் வாக்காளர்களாகப் பதிவு செய்யப்பட்டிருக்கிறார்கள். இது 18½ சதவிகிதத்திற்கு மேலாக 1971-லே இருந்ததைவிட அதிகமான தொகையென்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதிலே மாநில அரசு எந்தவிதமான அவசரத்தையும் காட்டிட விரும்பவில்லை. மாநில அரசின் சார்பில் நம்முடைய மாநில அளவிலே இருக்கிற தலைமை ஆணையாளர் அவர்கள் ஒரு குறிப்பினை மத்திய தேர்தல் ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைத்தார்கள். எந்த வகையிலே என்றால், 2—12—1974-லிருந்து 26—12—1974 வரையில் ஏறத்தாழ 4 வாரங்கள் enumeration என்கின்ற வகையிலேயும் அதற்குப் பிறகு preliminary publication என்கின்ற வகையில் 14—7—1975 என்கின்ற தேதியையும் குறிப்பிட்டு last date for receipt of claims and objections அதற்கென்று 13—8—1975 என்கின்ற தேதியைக் குறிப்பிட்டு disposal of claims and objections என்பதற்கு 25—8—1975 என்கின்ற தேதியைக்குறிப்பிட்டு printing of final list of amendments 25—9—1975 என்கின்ற தேதியைக் குறிப் பிட்டு final publication என்பதற்கு 1—10—1975, அதாவது அக்டோபர் 1975 வரையிலே—இவ்வளவு தாராளமாகக் காலத்தை ஒதுக்கி, மத்தியத் தேர்தல் ஆணைக்குழுவிற்கு நம்முடைய தேர்தல் ஆணை யாளர் அறிக்கையைச் சமர்பித்தார். இப்படி இருக்கலாம் என்கின்ற கருத்தினை எடுத்துரைத்தார். ஆனால், நமக்குள்ள குறிப்பின்படி

The Election Commission has agreed for an intensive revision with modification in the programme to finally publish the electoral rolls by 30th June 1975 instead of 1st October 1975 as suggested by us.

என்ற அளவில் நாம் 1—10—1975-லே அதை முடிவாக அறிவிக்கலாம், நல்ல நீண்ட இடைவெளி வாக்காளர்களைச் சேர்ப்பதற்கும், வருகின்ற

ஆட்சேபணைக் குறிப்புக்களைப் பற்றி பரிசீலிப்பதற்கும், இறுதியாக வாக்காளர் பட்டியலைத் தயாரித்து வெளியிடுவதற்கும் நீண்டகாலத்தை ஒதுக்கலாம் என்று சொன்னதற்கு மாருக, மத்தியிலேயிருக்கிற ஆணைக் குழு பிறப்பித்த உத்தரவு 30—6—1975-ஒடு, சூன் மாதத்தோடு, சூன் 30ம் தேதியோடு அதை முடித்தாகி விடவேண்டுமென்கிற அளவிலே அவர்கள் ஆணை பிறப்பித்தார்கள். அதை நடைமுறைப்படுத்தலாம் என்று எண்ணிய நேரத்தில், 28—12—1974-ம் தேதியன்று ஒரு டெலக்ஸ் மெஸேஜ் இங்கேயுள்ள தேர்தல் ஆணையாளருக்கு வந்தது. அந்த டெலக்ஸ் மெஸேஜிலே வந்த குறிப்பு :

The Commission has decided that a revision of electoral rolls during 1975 should be in accordance with the crash programme as was done during 1969–70.

என்ற அளவிலே, மத்திய தேர்தல் ஆணைக்குழு ஒரு டெலக்ஸ் செய்தியை அனுப்பியது. அந்தச் செய்தியின்படி அவர்கள் வகுத்த தேதிகளின்படி 1975–ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 28–ம் நாளோடு இதனுடைய வாக்காளர் பட்டியலுடைய இறுதி வடிவம் வெளியிடப்பட்டாக வேண்டும். நாம் முதலிலே எழுதி அனுப்பியது அக்டோபர் மாதம் வரையிலும் என்று. அவர்கள் ஒத்துக்கொண்டு சூன் மாதத்திற்குள்ளே முடித்து விடுங்கள் என்று. பிறகு 1974–ம் ஆண்டு டிசம்பர் மாதம் 28–ம் தேதியிலே அவர்கள் அவசரமாக அனுப்பிய டெலக்ஸ் மெஸேஜ் மூலம் பிப்ரவரி மாதத்திற்குள்ளாக நீங்கள் இதை முடித்துவிட வேண்டுமென்று ஆணை பிறப்பிக்கப்பட்டது. அந்த வகையிலே பணிகள் தீவிரமாக நடைபெற்று, வாக்காளர்கள் பதிவு முடிவுற்று, அவர்கள் சொன்னபடி பிப்ரவரி திங்களுக்குள் எல்லா வேலைகளையும் நாம் முடித்து அனுப்பி வைத்திருக்கிறோம். ஆகவே, மாநில அரசின்மீது எந்தக் குறைபாட்டையும் சொல்வதற்கில்லையென்பதையும் இங்கேயிருக்கிற தேர்தல் ஆணையாளர் மத்தியத் தேர்தல் ஆணைக் குழுவின்படி நடக்கவேண்டியவர் என்பதையும் பொன்னப்ப நாடார் அவர்கள் குற்றச்சாட்டுக்கு நான் பதிலாக அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தேர்தல் எப்பொழுது நடத்த வேண்டுமென்று ஏதாவது தகவல் வந்திருக்கிறதா ? நிலைத் தேர்தலுக்கு நாங்களெல்லாம் தயார்படுத்திக் கொள்ளலாமா என்பதை முதலமைச்சரவர்கள் சொல்வார்களா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : உங்களுடைய நிலையிலேதான் நாங்களும் இருக்கிறோம். எங்களுக்கு எந்தத் தகவலும் அதைப்பற்றி இல்லை.

அடுத்து, இந்த அவையிலே முக்கியமாகப் பேசப்பட்ட பிரச்னை இந்த மக்கள் மீது, மதுவிலக்குப்பற்றி போட்ட. . . .

திரு. கே. டி. கே. தங்கமணி : நமது மாநிலத்தைப் பொறுத்த வரையிலே எப்பொழுது தேர்தல் நடக்கும் என்பதைப்பற்றி சொல்ல முடியும் அல்லவா ? சாதாரணமாக இருந்தால் 1976-லே நடக்கும். அதற்கு முன்பு நடத்துவதற்காக ஏதாவது அரசுக்கு ஆலோசனை இருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பொதுத் தேர்தல் என்பது டெல்லியிலே இருக்கிற மத்திய தேர்தல் ஆணைக் குழு தீர்மானிக்க வேண்டிய ஒன்றாகும். மேலிடத்திலிருப்பவர்கள் தீர்மானிக்க வேண்டிய ஒன்றாகும். நான் அவ்வளவுதான் சூசகமாகச் சொல்லமுடியும். ஆகவே, என்னைவிட திரு. தங்கமணிக்குத்தான் இந்த இரகசியம் நன்றாகப் புரிந்திருக்க முடியும், இப்பொழுதுள்ள சூழ்நிலையின்படி. ஆகவே, அவர் என் வாயிலேயிருந்து வரவழைப்பதென்றால் அதிலே தோல்விதான் ஏற்படும். ஏனென்றால், சொல்வதற்கு என்னிடத்திலே தகவல் இல்லை. ஆகவே, தங்கமணி அவர்கள் என்னிடம் இரகசியமாகச் சொன்னால்கூடப் பரவாயில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : ஒருவேளை பொதுத் தேர்தல் நடந்தால், அவர்கள் கலைத்துவிட்டு நீங்களும் சட்டசபையைக் கலைத்து விட்டு நடத்துவீர்களா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அப்படி ஒன்று நடக்கும் போது பார்ப்போம் கலைப்பதா, கலைப்பதில்லையாவென்பதை.

தலைவரவர்களே, மதுவிலக்கைப் பற்றி பல உறுப்பினர்களும் நல்லபல கருத்துக்களை இங்கே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். மதுவிலக்கு மறுபடியும் நடைமுறைப்படுத்தப்படுவதை நம்முடைய முஸ்லிம் லீக் கட்சியின் சார்பிலே பேசிய நண்பர் வகாப் அவர்களும், என், எதிர்க் கட்சி வரிசையிலே இருந்து பேசியவர்களும் பாராட்டிவிட்டு அதே நேரத்திலே குற்றங்கள் நிறைய நடைபெறுகின்றன, அவைகளைக் கண்டுபிடிப்பதிலே மதுவிலக்குக்கென அமைந்துள்ள சிறப்புக் காவல் துறையினர் தங்களுடைய கடமையை மேலும் செம்மையாகச் செய்ய வேண்டுமென்றெல்லாம் குறிப்பிட்டார்கள். நான் அந்தத் தலைப்பிலும் சில விவரங்களை அவைக்குச் சொல்ல வேண்டியவனாய் இருக்கிறேன்.

மதுவிலக்கு மறுபடியும் அமுல்படுத்தப்பட்ட 1974-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 1-ம் தேதி முதல் 1975-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28-ம் தேதி வரை கண்டுபிடிக்கப்பட்டிருக்கிற மதுவிலக்குக் குற்றங்கள் 2,03,256 ஆகும்.

இதில் கள்ளச் சாராயம் காய்ச்சியதற்காக 22,910 பேர்,

சாராயம் வைத்திருந்ததற்காக 80,977 பேர்,

குடி போதையில் இருந்ததற்காக 77,673 பேர்.

இந்த 5, 6 மாதங்களில் இந்தக் குற்றங்களுக்காக சிறைக்கு அனுப்பப் பட்டவர்களுடைய எண்ணிக்கை 21,202. அதிலே, சேலத்திலே மாத்திரம் 10,504 பேர்கள் ஆகும்.

(பிற்பகல் 1-00)

அபராதம் விதிக்கப்பட்டவர்கள் 77,160 பேர்கள், அபராதமும் சிறைத் தண்டனையும் பெற்றவர்கள் 33,176 பேர்கள்.

இந்த அபராதத்தின் மூலமாக மாத்திரம் நமக்குக் கிடைத்திருக்கிற தொகை 52 லட்சம் ரூபாய் ஆகும், இந்த ஐந்தாறு மாதங்களில் அபராதத் தொகையின் மூலமாக வந்த வருவாய் 52 லட்சம் ரூபாய் ஆகும்.

மதுவிலக்கின் காரணமாக மரம் ஏறுகின்ற தொழிலாளர்களின் வாழ்க்கை பாதிக்கப்பட்டுவிட்டது என்பதை பொன்னப்ப நாடார் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். அவர்களுக்குப் புது வாழ்வு அளிப்பதற்கு 40 லட் சத்து 60 ஆயிரம் ரூபாய் செலவில் ஒரு சிறப்புத் திட்டத்தைத் தயாரித்து அதிலே 25% மாநில அரசும் 75 % வீதத்தை கதர் கிராமத் தொழில் ஆணைக் குழுவும் ஏற்று இதன்படி அந்தத் தொழிலாளர்களுக்கான கருவிகள், சாதனங்கள் எல்லாம் வழங்கப்படுகின்றன. அதன்படி அந்தப் பயன்பெற்றவர்களின் மொத்த எண்ணிக்கை 20,293 பேர்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள நிதியுதவித் தொகை இதுவரையில் 40,58,600 ரூபாய் அவர்களுக்கு வழங்கப்பட்டிருக் கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, அவர்களை கைவிட்டுவிடவில்லை.

மதுவிலக்குக் கொள்கை வெற்றி பெறவேண்டுமானால் நான் அடிக்கடி இந்த மாமன்றத்திலே எடுத்துச் சொன்னது போலவும் பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களும் காந்தியடிகளுடைய இந்தக் கொள்கை இந்தியா முழுமையும் நிறைவேற்றப்படவேண்டுமென்று சொன்ன அந்த அடிப் படையிலேயும் இது அகில இந்திய அடிப்படையிலே ஏற்றுக்கொள்ளப் பட்ட கொள்கையாக ஆகி எல்லா மாநிலங்களிலும் செயல்படுத்தப்பட்டால் தான் அது தமிழ்நாடு மாநில அளவிலேயும் வெற்றிகரமாகச் செயல் படுத்தப்படமுடியும் என்பதை மறந்துவிடக்கூடாது. அதற்காக மது விலக்குக் குற்றவாளிகள் பிடிக்கப்படாது விடப்படுவார்கள், பிடிக்கப்படாது விடப்படுகிறார்கள் என்பது அல்ல. தீவிர நடவடிக்கைகளை மதுவிலக்குக் காவல் துறை பிரிவினர் எடுத்ததன் விளைவாகத்தான் இவ்வளவு குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. இவ்வளவு குற்றங்கள் என்று சொல்கிற நேரத்திலே, ஏ, அப்பா ! 6 மாதங்களிலே இவ்வளவா ! என்று எண்ணத் தோன்றும். இந்த 6 மாத காலத்திலே இதுவரையிலும் பிடிபடாத குற்றங்க ளும் பிடிபடுகின்றன என்பதை இந்த விவரங்களிலிருந்து காவல் துறையைப் பாராட்டியும் எடுத்துக் கொள்ளலாம். 1967-68-ம் ஆண்டில் 2,11,987 பேர் கள் ஒரு ஆண்டுக் காலத்திலே சிறைச்சாலையிலே மதுவிலக்கு சம்பந்த மான குற்றங்களில் பிடிபட்டவர்கள் இருந்தார்கள். இந்தக் குற்றங் களிலே பிடிக்கப்பட்டவர்கள் 1968-69-ம் ஆண்டில் 2,70,962 பேர்களும்

1975 ஏப்ரல் 8] [டாக்டர் மு. கருணாநிதி]

1969–70-ம் ஆண்டில் 3,25,810 பேர்களும், 1970–71 ஆம் ஆண்டில் 3,46,699 பேர்களும் என்ற அளவிற்கு இந்தத் தொகை வளர்ந்து கொண்டே வந்தது, சாராயம் காய்ச்சுதல், சாராயம் வைத்திருத்தல், குடிபோதையில் இருத்தல் என்ற வகையிலே.

இன்னொரு விவரத்தையும் சொல்லியாக வேண்டும். டி.எல். 1, டி. எல். 2 இவைகளுக்கு ஏன் இங்கேயே தொழிற்சாலைகள் தரவேண்டு மென்று எல்லாம்கூட எடுத்துச் சொன்னார்கள்; டி.எல். 1, டி.எல். 2 என்பது இப்படிப்பட்ட லைசென்ஸ்களைப் பெறுவது இந்த அரசு வந்தபிறகு உருவாக்கப்பட்ட ஒன்று அல்ல.

1966–67ஆம் ஆண்டிலே 94 பேர்களுக்கு இந்த லைசென்ஸ்கள் வழங் கப்பட்டிருந்தன. 1971–72 ஆம் ஆண்டில் 93 பேர்கள்; 1972–73 ஆம் ஆண்டில் 90 பேர்கள் அதிகமாக அல்ல—94 பேர்கள் இப்போது 90 பேர் கள்தான் லைசென்ஸ்தாரர்களாக இருக்கிறார்கள்.

இதிலே கவனிக்கத்தக்க அம்சம் என்னவென்றால் 1966–67ஆம் ஆண் டிலே 94 பேர்களாக இருந்தபோது அவர்கள் டி.எல். 1 என்ற அந்த லைசென்ஸ் அடிப்படையிலே வாங்கிக்கொண்ட லிட்டர் 21,87,835 பெற் றார்கள். மதுவிலக்கு அமுலில் இருந்தபோது 21,87,000 லிட்டரைத்தான் அவர்கள் தங்கள் லைசென்ஸ் அடிப்படையிலே பெற்றார்கள்.

பிறகு, 1971–72ஆம் ஆண்டிலே நாம் மதுவிலக்கை ஒத்திவைத்த நேரத்திலே 8,56,409 லிட்டரைத்தான் பெற்றுக்கொண்டார்கள். 1972 73ஆம் ஆண்டில் 6,91,000 லிட்டரைத்தான் பெற்றுக்கொண்டார்கள். இப் போது மீண்டும் மதுவிலக்கு நடைமுறைக்கு வந்துவிட்ட காரணத்தினாலே பழைய 21 லட்சத்திற்கு நிச்சயமாக அவர்கள் செல்வார்கள். இது இன்றைக்கு இருக்கிற நிலைமை.

அதைப்போலவே டி.எல். 2. இதைப் பார்த்தாலும் 1966–67ஆம் ஆண்டு காங்கிரஸ் கட்சி ஆட்சியிலே இருந்த காலத்திலே இந்த உரிமங்கள் பெற்றவர்களின் எண்ணிக்கை 430; இன்றைக்கு அப்படிப்பட்டவர்களின் எண்ணிக்கை 356 தான். அதிகப்படியாகப் பெற்றார்கள் என்ற எண்ணி க்கை அல்ல, முன்பு 430ஆக இருந்த எண்ணிக்கை இன்றைக்கு 356 ஆகக் குறைந்து இருக்கிறது.

மதுவிலக்கு அமலில் இருந்த 1969–70ஆம் ஆண்டிலே 47,12,389 லிட்டரைப் பெற்றார்கள். மதுவிலக்கு ஒத்திவைக்கப்பட்ட பிறகு 1971-72 ஆம் ஆண்டில் 20,98,000 லிட்டராக அது குறைந்தது.

ஆக, இந்த டி.எல். 1, டி.எல். 2 உரிமதாரர்கள் இதைத் தவறான வகையிலே பயன்படுத்துகிறார்கள் என்ற செய்திகள் அரசுக்கும் இந்தத் துறையினுடைய காவல் அதிகாரிகளுக்கும் அடிக்கடி வந்ததன் காரணமாக நம்முடைய ரெவின்யூ போர்டின் சார்பில் 27—3—1975 அன்று தவறாகப் பயன்படுத்துகின்ற உரிமதாரர்கள் யாராக இருந்தாலும் அவர்கள்மீது நடவடிக்கை எடுப்பதற்கு ஒரு அரசு ஆணை, ஆணை எண்

98 என்பதின்கீழ் 27—3—1975-லே பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அதிலே பல அம்சங்கள் பல்வேறு வகையிலே எப்படி எப்படி கண்டிப்பாக இருக்க வேண்டுமென்று குறிப்பிடப்பட்டு இருந்தாலும் ஒன்றை மாத்திரம் இங்கே படித்துக்காட்ட விரும்புகிறேன்.

**It may be made compulsory that the spirit obtained by all categories of D.L. series licensees is brought into account and only after verification by the Range Officer concerned or a Revenue Official not lower in rank than a Deputy Tahsildar, is allowed to be sold.** என்கின்ற வகையிலே இவைகளெல்லாம் கட்டுப்படுத்தப்பட, தவருக நடந்தால் உடனடியாக அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க இன்றைக்கு போர்டு ஆப் ரெவின்யூ தந்த கருத்துக்களை ஏற்று, அரசு ஆணையாகப் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மேலும் அனைவருக்கும் இதிலே அக்கறை இருக்கிறது. மதுவிலக்கை நடைமுறைப்படுத்துகின்ற இந்த நேரத்தில் இதை வெற்றிகரமாக நடத்துவதற்கு மாண்புமிகு உறுப்பினர்கள் பொது வாழ்க்கையிலே அக்கறை கொண்டவர்கள் சமுதாய மேம்பாட்டிலே அக்கறைகொண்டவர்கள் அனைவரும் இதற்கு ஒத்துழைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஓய்வூதியங்களைப் பற்றி இங்கே பொன்னப்ப நாடார் அவர்களும் மற்றவர்களும் எடுத்துச் சொன்னார்கள். இந்த ஓய்வூதியத்தில் இந்த அரசு பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு எவ்வளவு சலுகைகள் அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன என்பதை நாம் கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். 1960 ஆம் ஆண்டு ஓய்வூதியங்கள் சட்டப்படி 25 ஆண்டுக் காலம் ஒரு அரசுப் பணியாளர் பணிபுரிந்திருந்தால் சராசரி ஊதியத்திலே 30/80 என்ற விகிதத்திலேதான் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வந்தது. அதனை 1972 ஆம் ஆண்டு இந்த அரசு மாற்றியமைத்து 30/80 என்ற விகிதத்தை அதிகப்படுத்தி 33/80 என்ற விகிதத்தைக் கொண்டு வந்து இருக்கிறோம்.

அதைப்போலவே கிராஜுவிட்டி, பணிக்கொடைக்கு அதிகபட்சம் பதினைந்து மாத ஊதியம் என்று இருந்ததை பதினாரரை மாத ஊதியம் என்ற அளவில் உயர்த்தியிருக்கிறோம்.

அகவிலைப்படி போதாது என்று பொன்னப்ப நாடார் இங்கே ரொம்ப ஆதங்கப்பட்டுக்கொண்டார். அவர்களுடைய காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் எந்தவிதமான அகவிலைப்படியும் ஓய்வுபெற்ற அலுவலர்களுக்குத் தரப்படவில்லை. 1972 ஆம் ஆண்டுதான் அவர்களுக்கு அகவிலைப்படி, மற்ற அரசு ஊழியர்களுக்கெல்லாம் தந்தபோது ஐந்து ரூபாய் தரப்பட்டது. பிறகு 1972 இல் அது பத்து ரூபாயாக உயர்த்தப்பட்டது. மீண்டும் 1-10-1973 முதல் 15 ரூபாயாக ஆக்கப்பட்டது. மீண்டும் 1—10—1974 இல் அதுவும் 20 ரூபாயாக உயர்த்தப்பட்டு தரப்பட்டு வருகிறது. இப்போது 1—2—1975 முதல் இந்த அகவிலைப்படி 28 ரூபாய் என்கிற அளவிற்கு உயர்த்தப்பட்டுள்ளது.

அதுமாத்திரமல்ல சராசரி ஊதியத்தைக் கணக்கிடுவதற்கு 12 மாதம் என்று இருந்ததை, பத்து மாதம் என்று குறைத்துக் கணக்கிடுவதால் அவர்களுக்கு இப்போது ஆதாயம் அதிகமாகக் கிடைக்கிறது

பணிசெய்யும் காலத்தில் ஏற்படும் இடையீடுகள் அனைத்தும் மன்னிக்கப் பட்டு ஓய்வூதியப் பணி காலம் கணக்கிடுவதற்கு சேர்த்துக்கொள்ளப்பட்டிருக் கிறது.

ஓய்வூதியம் பெற வயது வரும் நாளில் குறிப்பிட்ட நாளைக் கணக்கிடாமல் அந்த மாதக் கடைசிநாளைக் கணக்கில் எடுத்துகொள்ளப்படுகிறது. உதார ணமாக, ஒருவர் அந்த மாதத்தில் இரண்டாம் தேதி ஓய்வுபெறுகிறார் என்றால் அந்த இரண்டாம் தேதி வரை கணக்கில் எடுத்துக்கொள்ளாமல் அந்த மாதம் கடைசி வரையில் அவரை வேலையில் இருக்க அனுமதித்து அதற்குச் சம்பளமும் தரப்பட்டு அந்தத் தேதிவரையில் கணக்கிட்டு ஓய்வூதி, யம் வழங்கப்படுகிறது.

நிலையான பதவி வகித்த எவரும் 1—10—1969 முதல் ஓய்வூதியம் பெற தகுதி உடையவர் ஆவார்.

குறைந்த அளவு ஓய்வூதியம் எப்படி இருந்தது என்றால் 1—3—1970 முதல் மாதம் ஒன்றுக்கு 30 ரூபாய் என்று இருந்தது. பிறகு 1—4—1972 முதல் அதை 40 ரூபாய் ஆக்கினோம். இப்போது அதை 1—4—1973 முதல் 50 ரூபாயாக உயர்த்தியிருக்கிறோம். ஓய்வூதி யத்திற்கு இருந்துவந்த மேல்வரம்பு 1,800 ரூபாய் என்பதை நாம் நீக்கி விட்டோம்.

மிக மிக முக்கியமாக, ஓய்வூதியம் பெறுபவர்களுக்கும் மருத்துவச் சலுகைகள் வழங்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை அண்மையிலே ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

ஓய்வு பெறுபவர்கள் ஓய்வு பெற்ற இடத்திலிருந்து சொந்த ஊருக்குப் போகிறபோது பயணப்படி வழங்க வேண்டுமென்ற கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டு இருக்கிறது.

ஓய்வூதியம் விரைவில் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற நல்லதொரு கருத்தை திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் இங்கே சொன்னார்கள். அதிலே உள்ள சிக்கல்கள் தவிர்க்கப்பட்டு அது விரை வாகக் கிடைப்பதற்கு பண விடைத்தாள் (மணி ஆர்டர்) மூலம்கூட இன்றைக்கு அனுப்பப்படுகிறது. இருந்தாலும், அந்த ஓய்வூதியம் பெறு பவர்கள் பற்றி ஒப்புதல் கிடைப்பதற்கான சங்கடங்கள் இருக்கின்றன. அவைகளைப் போக்கி கூடிய விரைவில் இது கிடைப்பதற்கு அரசு தன்னலான முயர்சிகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திருமதி த.ந. அனந்தநாயகி: தலைவரவர்களே, இன்றைக்கும் பென்ஷன்தாரர்கள் நியாயமான குறைகளைச் சொல்கிறார்கள். நீங்கள் half the D.A. என்று மற்றவர்களுக்குக் கொடுக்கும் டி.ஏ.யில் பாதியைத்தான் தருகிறீர்கள், அதை ஏன் முழுது மாகத் தரக்கூடாது? இன்னொரு விஷயம், பத்தாண்டுகளுக்கு முன்

1975 எப்ரல் 8] [திருமதி த. ந. அனந்தநாயகி]

கம்யூட் செய்திருந்தால், 10 ஆண்டுகளுக்குப் பிறகு பென்ஷன் முழுவதும் தர முயற்சிப்பதாக வாக்குறுதி அளிக்கப்பட்டிருக்கிறது. அந்த வாக்குறுதி என்னவாகும் என்றும் அறிய விரும்புகிறேன்.

திரு. ஆ. கு. சுப்பையா: தலைவரவர்களே, முதியோர்களுக்கு உதவித் தொகை வழங்குகிறோம். ஒருவர் செத்தால்தான் மற்றவரை லிஸ்டில் சேர்க்கிறார்கள். மேலும் 20 ரூபாய் என்று கொடுப்பது மிகவும் குறைவு. அது உயர்த்தப்படுமா என்பதற்கு முதலமைச்சரவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அம்மையார் அவர்கள் சொன்னதும், நண்பர் சுப்பையா அவர்கள் சொன்னதும் ஏற்ற வகையில், உரிய நேரத்தில் பரிசீலிக்கப்படும்.

விடுதலை வீரர்கள் ஓய்வூதியம் பற்றியும், இந்தி எதிர்ப்பு வீரர்கள் ஓய்வூதியம் பற்றியும், எல்லைப் போராட்ட வீரர்கள் ஓய்வூதியம் பற்றியும் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் சொன்னார்கள். இப்பொழுது விடுதலை வீரர்களுக்கு, 1967-68ஆம் ஆண்டிலே 11 இலட்சம் ரூபாய் ஆண்டுக்கு வழங்கப்பட்டதற்கு மாறாக 1974-75-ஆம் ஆண்டில் ஏறத்தாழ 65 இலட்சம் ரூபாய் விடுதலை வீரர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. 7,996 பேர் இதன் மூலம் பயனடைகிறார்கள். இன்னும் முடிவுறாத நிலையில் உள்ள விண்ணப்பங்கள் 978 தான் என்பதை நான் கூறிக்கொள்கிறேன்.

அதைப்போலவே இந்திய தேசிய இராணுவத்தில் பணியாற்றிய வீரர்களுக்கு ஓய்வூதியம் தருவதில் இருக்கும் சங்கடங்களைப்பற்றிச் சொன்னார்கள். அவைகள் டெல்லியிலிலுள்ள தலைமையிடத்தில் சரி பார்க்கப்பட வேண்டியிருக்கிறது. வருமானம் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து விவரம் சேகரிக்கப்பட வேண்டியிருக்கிறது. சிறைத்தண்டனைபற்றி சிறை மேற்பார்வையாளர்களிடமிருந்து தகுதிச் சான்றிதழ் கிடைப்பதில் காலதாமதம் ஏற்படுகிறது. இந்த ரிகார்டுகள் கிடைப்பதில் சிரமம் ஏற்பட்டு இதனால் தடங்கல் இருக்கிறது. அவைகளையும் போக்குவதற்குத் துரிதமாக ஏற்பாடுகளைக் கவனிக்க வேண்டுமென்று நான் அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டிருக்கிறேன்.

தாமிரப் பட்டயம் வழங்குவதைப் பொறுத்தவரையில் மத்திய அரசு சார்பாக வழங்கப்பட்டது. நம்முடைய மாநில வீரர்கள் 2,356 பேர்களுக்குத்தான் கிடைத்தது. அவர்கள் நிர்ணயித்த விதிமுறைகளின்படி. எனவே, தமிழகத்திலே இருக்கின்ற இந்திய நாட்டின் விடுதலை வீரர்களுக்கு மத்திய அரசு வழங்காவிட்டாலும் மாநில அரசு தமிழக அரசின் சார்பில் வழங்க முடிவுசெய்து விடுதலை வீரர் பட்டயத்தை மேலும் 5,175 பேர்களுக்கு வழங்கியிருக்கிறது.

இந்தி எதிர்ப்பு வீரர்கள் சம்பந்தமாக இதுவரையிலே 629 பேர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. இதிலே கன்னியாகுமரி மாவட்டத்திலே போராட்டத்திலே ஈடுபட்ட எல்லைப்போராட்ட வீரர்களும், திருத்தணி

எல்லைப் போராட்ட வீரர்களும் அடங்குவார்கள். மேலும் வரும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அவர்கள் சொன்னார்கள். கன்னியாகுமரி மாவட்டத் திலே, இந்தப் போராட்டத்திலே ஈடுபட்டவர்களைப் பற்றிய குறிப்புகள் சிறைச்சாலைத் தகவல்களில் எதுவுமே கிடைக்கவில்லை என்று. வேதனை யோடு அவர் தெரிவித்தார். நான் கூட வேதனையோடு சொல்லிக்கொள்ளு வேன், 1965 ஆம் ஆண்டு நடந்த இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட வர்களுடைய தொகை பல லட்சக்கணக்கிலே இருக்கும் என்பதை அன்றைய தினம் முதலமைச்சராக இருந்த பெருமதிப்பிற்குரிய திரு. பக்தவதசலம் அவர்களேகூட அறிவித்திருக்கிறார்கள். ஆனால், அப்பொழுது இரண்டு மூன்று மாதங்கள் சிறைச்சாலையிலே இருந்த வர்களையெல்லாம் கூட—சொல்லவே எனக்கு நாக் கூசுகிறது—அப்படிச் சிறைச்சாலையில் இருந்தார்கள் என்று எந்தப் பதிவும் கூடச் செய்யாமல் அவர்கள் சிறைச்சாலையிலே அடைக்கப்பட்டு 2, 3 மாத காலம் சிறையிலே வைக்கப்பட்டு பிறகு விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களையெல்லாம் இன்றைக்குக் கண்டுபிடித்து அவர்களின் மனுக்களை ஆராய்ந்து வருகிறோம். இந்தி எதிர்ப்புப் போராட்ட வீரர்களுக்கும் எல்லைப் போராட்ட வீரர்களுக்கு உள்ள அதே கதைதான் ஏற்பட்டிருக் கிறது. அவர்களுக்கு இந்த மனுக்களை ஆராய்ந்து வழங்குவதில் சிரமம் இருக்கிறது. இருந்தாலும் அந்தச் சிரமங்களைப் பாராமல், இதில் சரியானவை என்று கருதப்படுகிற அந்த விண்ணப்பங்கள் ஏற்கப்பட்டு அதற்கு ஆவன செய்யப்படுகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து வறட்சி நிவாரண நிதி பற்றி . . .

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, காங்கிரஸ் தியாகிகளுக்கு ஜெயிலிலேயிருந்து கொடுக்கும் அத்தாட்சி இல்லாவிட்டால் அவர்களிட மிருந்து தலைவர் யாராவது சர்ட்டிபிகேட் கொடுத்தால் போதும் என்று சொன்னதைப்போல இந்தி எதிர்ப்பு தியாகிகளுக்கும் அந்த சான்றிதழ் வாங்குவதில் கடினமாக இருக்கிறது. பலருக்குக் கிடைக்கவில்லை. எனவே, அவர்களுடன் இருந்த சட்டமன்ற உறுப்பினர்களோ அல்லது அமைச்சர்களோ சான்றிதழ்கள் கொடுத்தால் அவைகளை ஏற்றுக் கொள் ளும் வகையில் முதலமைச்சரவரர்கள் பரிசீலிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. பெ. சீனிவாசன் : தலைவரவர்களே, முன்பே நான் சொல்லி யிருக்கிறேன். இதில் இலட்சக்கணக்கான மாணவர்கள் சம்பந்தப்பட்டிருக் கிறார்கள். பல்லாயிரக்கணக்கான மாணவர்களின் "கேரியர்" ஸ்பாயிலாகி இருக்கிறது. பலபேர் பட்டம்கூட வாங்க முடியவில்லை. அவர்கள் ஒவ் வொருவரையும் தேடிக் கண்டுபிடிப்பது கூடச் சிரமம். அப்படிப்பட்டவர்கள் அணுகும்பொழுது மானியம் கொடுக்காவிட்டாலும் அவர்களுக்கு அரசாங்க உத்தியோகம் கொடுப்பதிலேயாவது சலுகை காட்டப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

திரு. கோவை செழியன் : பேரவைத் தலைவரவர்களே, இந்தி எதிர்ப்புப் போராட்டம் பல கட்டங்களில் நடந்திருக்கிறது. 1952-ல் கூட இந்த இரயில்வே ஸ்டேஷன்களிலே உள்ள எழுத்துக்களை அழித்து இரண்டு மூன்று மாதங்கள் சிறைத் தண்டனை பெற்றிருக்கிறார்கள். இராஜாஜி முதலமைச்சராக இருந்த காலத்தில்கூட பலபேர் சிறைச்சாலைக்குப் போயிருக்கிறார்கள். அவர்களையும் சேர்த்துக் கொள்ளப்படுமா? அது சம்பந்தமாக என்ன கூறுகிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, 1938 ஆம் ஆண்டிலே, இராஜாஜி அவர்கள் கட்டாய இந்தியைப் புகுத்திய காலத்திலே யிருந்து கணக்கிலே எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நண்பர் திரு. வீராசாமி அவர்கள் கேட்டதைப் போலவும், நண்பர் திரு. சீனிவாசன் அவர்கள் கேட்டதைப் போலவும், இலட்சக்கணக்கான மாணவர்கள் பாழ்படுத்தப்பட்டார்கள், பாழ்பட்டார்கள், பலர் சிறைச்சாலை யிலே இருந்ததற்கான அத்தாட்சிகள் இல்லாமல் அவதிப்பட்டுக்கொண்டி ருக்கிறார்கள். விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு வழங்கப்பட்டதைப்போல முன்னாள் அமைச்சர்கள் அல்லது காங்கிரஸ் கட்சியின் தலைவர்கள் அல்லது குறிப்பிட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் நற்சான்று வழங்கினால் வழங்கப் படுமா என்று கேட்கப்பட்டது. அப்படி வழங்கப்படும் நற்சான்றுகளையும் மீண்டும் ஒரு பரிசீலனை செய்து தான் நாமும் அவைகளை ஏற்றுக்கொள்கி றோமே அல்லாமல் எல்லா நற்சான்றுகளையும் ஏற்றுக் கொள்வது என் றால், பிறகு சட்ட மன்ற உறுப்பினர்கள் பாடு ரொம்ப ஆபத்தாகிவிடும். அமைச்சர்கள் அல்லது கட்சியின் தலைவர்கள் இவர்களெல்லாம் மிகுந்த பிரச்னைக்கு ஆளாகிவிடுவார்கள். அப்படியே வழங்கினாலும் கூட அவை களையும் பரிசீலித்துத்தான் அரசு நடவடிக்கைகளை எடுக்க வேண்டியிருக்கி றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வறட்சிப் பணிகளைப்பற்றி ஏறத்தாழ 20 கோடி ரூபாய் அதற்காக இந்த ஆண்டு திட்டமில்லாத செலவாக வறட்சிப் பணிகளுக்கு மட்டும் செலவிடுவது என்று ஒதுக்கப்பட்டிருப்பதால் அதுபற்றிப் பல கருத்துக்கள் இந்த மாமன் றத்திலே எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன.

இதிலே நண்பர் திரு. ஆலடி அருணா அவர்கள் பேசும்பொழுது தேசிய நிதி என்று ஏற்படுத்தினால், அது இயற்கையின் சீற்றத்தால் இந்தியாவி லிலே எங்கே கஷ்டம் ஏற்பட்டாலும் அந்தத் தேசிய நிதியிலிருந்து எடுத்துக் கொள்ளலாம் என்ற வகையிலே கூறப்பட்ட மத்திய அரசின் யோசனையை ஆந்திரா, அசாம், குஜராத், ஹரியானா, மத்திய பிரதேசம், மகாராஷ்டிரா, மேகாலயா, நாகாலாந்து, ஒரிசா, தமிழ் நாடு, உத்திரப்பிரதேசம், மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்கள் எதிர்த்ததைக் குறிப்பிட்டார்கள். இவ்வளவு மாநிலங்களும் எதிர்த்ததற்குக் காரணம் என்னவென்றால், ஏதோ நமக்கு தேசிய உணர்வு இல்லை என்று வேண்டுமானால் யாராவது தொடர்ந்து திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றித் தவறான பிரச சாரம் செய்பவர்கள் சொல்லிக்கொண்டிருக்கலாம். ஆனால் இவ்வளவு

1975 ஏப்ரல் 8] [டாக்டர் மு. கருணாநிதி]

மாநிலங்களும் சேர்ந்து எதிர்த்ததற்குக் காரணம் ஒவ்வொரு மாநிலமும் எந்த அடிப்படையில் இதற்கு நிதியைச் செலுத்த வேண்டுமென்பதிலும் அதை மத்திய அரசு தரும் மானியங்களில் சரிக்கட்டுவதா அல்லது மாநில அரசுகள் தனியாக இதற்காக நிதி செலுத்துவதா என்பதிலும் முடிவு செய்வது கடினமாகிவிடும் என்பதால்தான் நம்முடைய மாநிலம் கருத்து தெரிவித்தது. இதே வகையிலேதான் மற்ற மாநிலங்களும் கருத்தை அறிவித்தனவே தவிர ஏதோ தேசிய நிதி, துயர் தணிப்புக்காக ஒதுக்கப் படுவதை தேவை இல்லை என்ற அளவில் நாம் கூறவில்லை. இப்படிப்பட்ட சங்கடங்கள் ஏற்படும் என்றுதான் எல்லா மாநிலங்களும் கட்டுப்பாடாக அதனால் வரும் சங்கடங்களைக் கூறி தேவையில்லை என்று கூறினார்கள்.

ஆறுவது நிதி ஆணைக் குழுவின் வறட்சி நிதி பற்றிய கொள்கைக்கு ஏற்கெனவேயே இந்த அரசு ஒத்துக்கொண்டதாகக் கூறினார்கள்.

ஆறுவது நிதி ஆணைக் குழு இவைகளை யெல்லாம் மாநில அரசுகளைக் கலந்து முடிவு எடுப்பதில்லை. தாங்கள் எடுத்த கருத்துக்களை அறிவிக்கி றார்கள். அந்தக் கருத்துக்களுக்கு மாறான கருத்துக்களை நாம் தொடர்ந்து வலியுறுத்திக்கொண்டே வருகிறோம். அவர்கள் என்ன சொல்லுகிறார்கள்? வறட்சி நிதி கொடுத்தால் அதைத் திட்டத் தொகையில் கழித்துக் கொள்ள வேண்டுமென்பது ஆறுவது நிதிக் குழுவின் யோசனை ஆகும். அது இயலாதது. ஒரு வகையில் கொடுத்துவிட்டு ஒரு வகையில் அதைக் கழித்துக் கொள்வதால் திட்டங்கள் தேக்கப்பட்டுவிடும். திட்டங்களைச் செயல் படுத்த முடியாத சூழ்நிலை உருவாகும். ஆகவே, வறட்சி நிவாரண நிதியை அப்படிக் கழித்துக் கொள்ளக்கூடாது என்று நம்முடைய அரசு சார்பாக வாதித்து வருகிறது.

ஏதோ நம்முடைய மாநிலத்திற்கு வரவேண்டியதை இழந்து விடுவதா என்றெல்லாம் சொன்னார்கள்—ஆலடி அருணா அவர்கள் கொஞ்சம் வேக மாகக் கேட்டார்கள். இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் பேசுகிற நேரத்திலே கூட நல்ல வேளையாக சுப்பிர மணியத்தின் போக்கைக் கண்டித்துவிட்டு, இருந்தாலும் நம்முடைய அரசு மத்திய சர்க்காரிடத்திலிருந்து நிதியைப் பெற்றுக்கொள்ளலாம் என்று எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் சுப்பிரமணியத்தின் அந்தப் பேச்சு கண்டிக்கத்தக்கது என்று கூறியபோது அந்த உள்ள உணர்வு, அவருக்கு இருக்கிற மனசாட்சியை நான் அறிந்து பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1969-70 முதல் 1972-73 வரை இயற்கையின் சீற்றங்களால் ஏற்பட்ட சங்கடங்களைத் தீர்க்க மத்திய அரசு எந்த வகையில் ஒவ்வொரு மாநிலத் திற்கும் உதவி இருக்கிறது என்று எண்ணிப் பார்க்கின்ற நேரத்தில் ஒரு முறை திரு. அருணாவே இந்த மன்றத்தில் பேசியதாக எனக்கு நினைவு. 1969-ல் இருந்து 1972-73 வரை கொடுக்கப்பட்ட உதவித் தொகை—

மாராட்டியத்திற்கு மாத்திரம் 1969-73 வரை 108 43 கோடி ரூபாய் தந்திருக்கிறார்கள் துயர் தணிப்புக்காக.

ராஜஸ்தானுக்கு 91·01 கோடி ரூபாய்;

ஆந்திரத்திற்கு 82·43 கோடி ரூபாய்;

மேற்கு வங்கத்திற்கு 52·84 கோடி ரூபாய்;

குஜராத்திற்கு 43·64 கோடி ரூபாய்;

பீகாருக்கு 37·50 கோடி ரூபாய்;

தமிழ் நாட்டிற்கு 17·76 கோடி ரூபாய் 1969-73 வரை வழங்கியிருக்கிறார்கள்.

அங்கே எல்லாம் அதிகமாக வழங்கினார்கள், இங்கே குறைவாக வழங்கினார்கள் என்ற சர்ச்சைக்குக் கூட இடம் அளிக்காமல்—ஆனால் வழங்கப்படுகிற தொகையை நீங்கள் திட்டத்தில் கழித்துக்கொள்கிறீர்களே, அது சரியல்ல என்பதுதான் நம்முடைய அரசின் வாதம் இங்கிருக்கும் மற்றக் கட்சிக்காரர்கள் வாதமும் கூட அந்த வகையில்தான் அமைந்திருக்கிறது.

மற்ற மாநில அரசுகள் ஒரே கட்சியின் கீழ் உள்ள அரசுகளாக இருப்பதால் அவர்கள் மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் தத்தளிக்கிறார்கள். இருந்தாலும் அவர்கள் தங்கள் கருத்துக்களை நிதிக் குழுவிடத்திலும், திட்டக் குழுவிடத்திலும் நம்மைப் போல வெளிப்படையாக அறிவிக்காவிட்டாலும், அவர்களுக்கு இருக்கும் சங்கடங்களை மற்ற மாநில முதலமைச்சர்களுடன் தெரிவித்திருக்கிறார்கள். அவ்வளவுதான்.

ஏதோ சுப்பிரமணியம் அவர்கள் இங்கு வந்து பேசிய பிறகு அவர் நிதியமைச்சராக அங்கு இருக்கும் வரை பணம் தேவையில்லை, வாங்க மாட்டோம் என்று நாம் அறிவித்துவிட்டு அதற்குப் பிறகு இன்னொரு நிபந்தனை விதித்தேன். நான் பின்வாங்கிவிட்டேன் என்றெல்லாம் கருத்துப்பட இங்கே பேசப்பட்டது. சுப்பிரமணியம் அவர்கள் கணக்குப் பார்த்துத் தான் தரப்படும் என்று தியாகராய நகர் கூட்டத்தில் அறிவித்தார். அதற்குப் பிறகு நாம் வறட்சி நிவாரண நிதி திரட்ட ஆரம்பித்ததும் அவரும், அவரைச் சார்ந்திருக்கும் கட்சியினர், அவர்களுடைய தோழமைக் கட்சியினர் எல்லாம் வறட்சி நிவாரண நிதி தரமுடியாது, தருவதைத் தடுப்போம் என்ற அளவில் பேசிக்கொண்டிருந்துவிட்டு, அவரே அவருடைய ஒரு மாத ஊதியத்தை தமிழக அரசு திரட்டுகிற வறட்சி நிதிக்கு தந்தார். அதற்காக தான் அவருக்கு நன்றி தெரிவித்துக்கொண்டேன். அதற்குப் பிறகு அவரே தமிழ் நாட்டில் உள்ள பல பகுதிகளுக்குச் சென்று வறட்சி நிவாரணப் பணிகளைப் பார்வையிட்டார். பணிகள் செம்மையாக நடைபெறுகின்றன என்ற பாராட்டுதலையும் அறிவித்துவிட்டு டில்லிப் பட்டணத்திற்குத் திரும்பச் சென்றார்.

ஆலடி அருணா குறிப்பிட்டதுபோல் இன்னும் அடுத்த ஒதுக்கீட்டுக்கான மதிப்பீட்டைத் தமிழக அரசு அனுப்பி வைக்கவில்லை என்று சுப்பிரமணியம் குறிப்பிட்டதாகக் கூறினார். உண்மைதான், அனுப்பி வைக்கவில்லை.

கவர்னர்கள் மாநாட்டில் கூட கவர்னர் அவர்கள் நமது கருத்தை வற் புறுத்தி யிருக்கிறார்கள். நாம் எடுத்திருக்கும் நிலை வறட்சிக்காகத் தரப் படுகிற பணம் திட்டத்திலிருந்து கழித்துக் கொள்ளப்படக் கூடாது என்ப தாகும். இது ஏதோ சுப்பிரமணியம் பிரச்சினைக்குப் பிறகு எடுத்த முடிவு என்று யாரும் கருதத் தேவையில்லை.

1975-76-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கை இந்த மன்றத்தில் மார்ச் திங்கள் முதல் நாள் இந்த அவையில் படிக்கப்பட்ட போதே 7 ஆம் பக்கத்தில் நான் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறேன். அதில்,

"..................துயர் தணிப்புப் பணிகளுக்காக மத்திய அரசிடம் நாம் கோரும் உதவி, கூடுதல் நிதி வசதியாகவே அமைய வேண்டும். மத்திய அரசிடம் நாம் கேட்கும் தொகை, வரும் ஆண்டுகளில் மத்திய அரசு தரும் இயல்பான திட்ட நிதி உதவியை முன்ன தாகவே தருவது என்று அமைந்து, அடுத்த ஆண்டுத் திட்டத்தில் குறைக்கப்பட்டு விட்டால், நமக்குப் பயன் ஏதும் இராது. வெறும் கணக்கு வழக்காக ஏட்டளவில் இல்லாமல், உண்மையான நிதி உதவி, மத்திய அரசிடமிருந்து நமக்குக் கிட்ட வேண்டுமென்பதே நமது கருத்து" என்று சொல்லியிருக்கிறேன்.

இந்தக் கருத்தைத்தான் மீண்டும் மீண்டும் வலியுறுத்திச் சொல்லி வருகிறோம். இப்போதும் சொல்கிறோம். கவர்னர் பெருமான் டில்லிக்குச் சென்றபோது விவாதித்த நேரத்தில் ஆளுநர் அவர்களிடத்தில் அதைப் பற்றிச் சொல்லியிருக்கிறேன். இதைக் கழித்துக் கொள்வது என்றால் ஐந்தாவது திட்ட காலத்தில் இதைக் கழித்துக்கொள்ள வேண்டாம். ஆறாவது திட்ட காலத்தில் வேண்டுமானால் கழித்துக் கொள்வது பற்றி பிறகு முடிவு எடுக்கலாம் என்று கூறினேன். அந்தக் கருத்தை வலி யுறுத்த வேண்டும் என்ற என்னுடைய கருத்தை ஆளுநர் அவர்களிடத்தில் எடுத்துச் சொன்னேன். அவர்கள் அங்கு அதைப் பிரதிபலித்திருப்பதாக க்கூட பத்திரிகையில் கண்டிருக்கிறோம்.

ஏனென்றால், இது 1975-ம் ஆண்டு. 1976-ம் ஆண்டு நாங்களே தேர்ந் தெடுக்கப்பட்டு இந்தச் சர்க்காருக்கு வரலாம், அல்லது காங்கிரஸ் கட்சியே தேர்ந்தெடுக்கப்பட்டு சர்க்காருக்கு வரலாம் அல்லது இப்போதே யார் யார் எந்தெந்த அமைச்சர்கள் என்று அறுதியிட்டுக் கொண்டு மிக ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிற வேறு சில கட்சிகளும் இங்கே அமைச்ச ரவைக்கு—இந்த அரசுக்கு வரலாம். அப்படி வருகிற நேரத்தில் நாங்கள் அந்தப் புதிய அரசுக்கு இப்படிப்பட்ட ஒரு தொல்லையை ஏற்படுத்திவிட்டுப் போக எண்ணவில்லை, நினைக்கவில்லை.

ஏனென்றால், இப்போது, 20 கோடி, 25 கோடி ரூபாய் தந்து விட்டு அடுத்த ஆண்டு இந்த அரசுக்கு ஒதுக்கப்படுகிற திட்டத் தொகையில் மத்திய அரசு உதவித் தொகையில் 70 சதவிகிதம் கடனாகவும், 30 சத விகிதம் மானியமாகவும் தருவதிலே ஐந்நூறு கோடி ரூபாயை அடுத்த ஆண்டே கழித்துக்கொள்வது என்றால் அடுத்த ஆண்டு—1976-77-ம்

ஆண்டுத் திட்டம் மிக மிகச் சங்கடத்திற்கு ஆளாகும். அப்போது அமைகிற புதிய சர்க்கார் அந்த வேதனையைச் சந்திக்க வேண்டிய துன்பகரமான ஒரு சூழ்நிலைக்கு ஆளாகும். இவைகளை எல்லாம் மனதில் வைத்துத் தான் நாம் சொல்லுகிறோம். இதற்குப் பிறகாவது எட்டமண்ட் போன்ற வர்கள், நியாயமாகத்தான் வாதிடுகிறார்கள் இப்போதுள்ள அரசினர் என்று கருதுவார்கள் என்று எண்ணுகிறேன்.

வறட்சி நிவாரணத்திற்காக என்ற தலைப்பில் கொடுத்துவிட்டு பிறகு திட்டத் தொகையில் கழித்துக்கொண்டால் விளம்பரத்திற்கு தெரியும். மத்திய சர்க்கார் வறட்சிக்காக இத்தனை கோடி ரூபாய் தமிழகத்திற்குத் தந்தது என்பது ஆனால் உண்மையான நிலை என்ன? உண்மை நிலை திட்டங்களில் அந்தந்த தொகை கழித்துக் கொள்ளப்பட்டு அரசு சங்கடத் திற்கு ஆளாக நேரிடும். ஆகவேதான் நான் விதித்திருக்கும் நிபந்தனை கூட அல்ல இன்றைக்கு வைத்திருக்கும் கோரிக்கை இந்த ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் கழித்துக் கொள்ளாமல் பிறகு ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலே கழித்துக் கொள்வதைப் பற்றி யோசிக்க லாம் என்ற வகையில் கருத்துகள் இன்றைக்கு அறிவிக்கப்பட்டிருக் றது—டில்லி சர்க்காருக்கு. மற்ற மாநில அரசுகளும் இதே கருத்தைக் கொண்டிருக்கும் என்றாலும் அவர்களே வெளிப்படையாக அறிவிப்பார் களா இல்லையா என்பது வேறு விஷயம். இந்தியத் திருநாட்டில் தமிழக மாநிலத்தில் இருக்கும் இந்த அரசு மற்ற மாநிலங்கள் சார்பாக வாதிடு வதை மற்ற மாநில அரசுகள் நிச்சயமாக மனமார வெளியே சொல்ல அச்சம் இருந்தாலும்கூட பாராட்டுவார்கள் என்று நான் கருது கிறேன்.

திரு. பெ. சீனிவாசன் : முதலமைச்சர் அவர்கள் கூறியதிலிருந்து மற்ற மாநிலங்களுக்கு வறட்சி நிதிக்காக மத்திய அரசு கொடுத்த தொகை உள்ளபடியே பலமடங்கு அதிகமாக இருக்கிறது. மத்திய சர்க்கார் இந்த முறையின் மூலம் திட்டத் தொகையில் சேர்ப்பது மூலமே பாரபட்சம் இல்லாமல் பின்னால் திட்டத்திற்குப் போராடி பஞ்ச நிவாரணத்திற்கும் சேர்த்துக் கேட்கலாம் அல்லவா? மகாராஷ்டிராவுக்கு அவ்வளவு பணம் கொடுத்திருக்கிறார்கள், பஞ்ச நிவாரணம் என்ற பெயரில் சலுகையாகக் கொடுத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நான் சொன்ன அந்தக் கணக்கு விவரங்கள் எல்லாம் ஆறாவது நிதிக் குழுவுக்கு முந்தியவை. இப்போது சொல்லப்பட்ட விவரங்கள் ஆறாவது நிதிக் குழுவால் வந்திருக்கிற விளைவுகள்.

திரு. ஆலடி அருணா : மத்திய சர்க்கார் திட்ட ஒதுக்கீடு பணத்தில் இருந்து பிடித்துக் கொள்ள வேண்டுமென்று வந்ததற்குக் காரணமே மத்திய சர்க்கார் பிற மாநிலங்களுக்கு அரசியல் அடிப்படையில் அதிகமான

அளவுக்கு செலவழிக்கும் அளவுக்கு நடந்துகொண்ட காரணத்தால்தான் முறையாக, கட்டுப்பாடாக கொடுக்க வேண்டுமென்ற முறையில்தான் இப்படி ஒரு முறையைக் கொண்டுவர வேண்டுமென்று நிதி ஆணைக் குழு கொண்டு வந்திருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பரவாயில்லை, நண்பர் அருணா அவர்கள் மத்திய சர்க்கார் இந்த நிதியை எல்லாம் அரசியல் அடிப்படையில்தான் வழங்குகிறது என்று ஆருவது நிதிக்குழு சுட்டிக் காட்டியிருப்பதை எடுத்துக் காட்டியதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். மத்திய சர்க்கார் அரசியல் அடிப்படையில்தான் இதையெல்லாம் செய்கிறது. அரசியல் அடிப்படையில் திட்டத் தொகையில் கழித்துக் கொள்வதை எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்? அதைக் கேட்டுச் செய்யலாம்.

திரு. ஆலடி அருணா : கடந்த காலத்தில் அப்படி நடந்தது மத்திய சர்க்கார். மற்ற மாநிலங்கள் அதைத் தவிர்க்க இந்த முறை ஓரளவு நல்ல முறை கூட. இப்போது அவர்கள் 30 சதவிகிதம் மானியமாகத் தருகிறார்கள், அதனால் அதிகப் பணம் கிடைக்குமே, அதை ஏன் இழக்க வேண்டும் என்றுதான் நண்பர் சீனிவாசன் கேட்கிறார்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்போது 20 கோடி ரூபாய் கொடுத்துவிட்டு அடுத்த ஆண்டுத் திட்டத்திலே 5 கோடி ரூபாய் கழித்துக் கொள்ளலாம் என்று வந்தால் நமக்கு அடுத்த ஆண்டு திட்டத்திற்கு சென்ட்ரல் அசிஸ்டென்ஸ் 40 கோடி என்று கணக்கிட்டு அதிலே 5 கோடி கழித்து 35 கோடி தான் சென்ட்ரல் அசிஸ்டென்ஸ் கிடைக்கும்.

(பிற்பகல் 1.30).

பிறகு நாம் ரிசோர்ஸஸ்-ஐ பெருக்கவேண்டியிருக்கும். இப்படிப் பட்ட சங்கடங்கள் பொருளாதார ரீதியில் எல்லா மாநிலங்களாலும் இன்றைக்கு எடுத்து வைக்கப்பட்டிருக்கிற சங்கடங்களாகும். ஏதோ மத்திய அரசுக்காக வாதாடுவதற்காக நம்முடைய மாநில உரிமைகளை விட்டுக் கொடுக்க முனைவது நல்லதல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பெ. சீனிவாசன் : மத்திய அரசு செய்தது தவருக இருந்தால் நாங்களும் உங்களோடு சேர்ந்து கண்டிக்கிறோம். மத்திய அரசு வறட்சிப் பணிகள் என்ற பெயரால் மற்ற மாநிலங்களுக்குக் கூடுதல் தொகை ஒரு காலத்தில் அந்த தொகையை எதிர்காலத்திலும் தரக் கூடும். அதைத் தடுப்பதற்கு இது ஒரு செக் பாயின்ட்டாக இருக்கலாம் அல்லவா? அதை இப்போது பயன்படுத்திக்கொள்ளலாம். பின்னால் எப்போதாவது கூடுதல் பணம் வேண்டுமென்றால் போய்க் கேட்கலாமே.

திருமதி த. ந. அனந்தநாயகி : மற்ற மாநிலங்கள் பஞ்சப் பிரதேசங்கள்—எங்கெங்கு பஞ்சம் வருகிறது என்று அவைகளை பஞ்சப் பிரதேசங்களாக பிரகடனப்படுத்தியிருக்கிறார்கள். நீங்கள் அப்படி பிர

கடனப்படுத்திஞேம் என்று சொல்கிறீர்களா? சில சில காரியங்களேத்தான் செய்திருக்கிஞேம். மகாராஷ்ட்ராவில் அவர்கள் அவ்வளவு பணம் வாங்கியிருக்கிருர்கள் என்ருல்—

You do not declare the entire district as a famine area. The entire Maharashtra has been declared as a famine stricken State.

அவர்கள் அப்படிப் பிரகடனப்படுத்தியிருக்கிருர்கள். நீங்கள் அப்படி பிரகடனப்படுத்தவில்லே.

மாண்புமிகு டாக்டர் மு. கருணநிதி : ஒரு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே நோட்டிபை செய்த விவரங்களேக் கூடத் தெரிந்து கொள்ளாமல் இருப்பது சரியல்ல. எங்கெங்கு வறட்சி இருக்கிறதோ அந்தப் பகுதிகள் அனேத்தும் வறட்சிப் பகுதிகள் என்று நோட்டிபை செய்யப்பட்டிருக்கின்றன. (குறுக்கீடு) 130 அல்ல, 11,000 க்கு மேற்பட்ட கிராமங்கள்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : 76,000 கிராமங்களில் 51,000 க்கு மேற்பட்ட கிராமங்கள் வறட்சிப் பகுதிகளாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறது.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : The Hon. Chief Minister says 11,000 villages. The Revenue Minister says 51,000 villages ....

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தமிழ் நாடு பூராவும், மொத்தமாக உள்ள 76,000 கிராமங்களில் 51,000 கிராமங்கள் வறட்சிப் பகுதிகளாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஆலடி. அருணு : இதில் சொல்லப்பட்டிருக்கிறது.

" The expenditure which stood at Rs. 151·87 crores in 1969–70 crose to an all Time peak of Rs. 318 crores in 1972–73".

இந்த அளவிற்கு வறட்சிப் பணிகள் என்ற பெயரால் பிற மாநிலங்கள் வாங்கியிருக்கின்றன. நமக்குக் கிடைக்க வேண்டிய நியாயமான பங்கு கிடைக்கவில்லே. ஆகவே, மத்திய அரசு செய்த தவறை அல்லது தவருன வழியைக் கண்டிக்கும் நேரத்தில் இப்போது கிடைப்பதை வாங்கிக் கொண்டு பின்னுல் வேண்டுமென்ருல் பணத்திற்கு எழுதலாம். இப்போது மானியம் 30% கிடைப்பதை நாம் பெற்றுக்கொள்ளாமல் இருப்பது சர்க்கார் தவறு.

மாண்புமிகு டாக்டர் மு. கருணநிதி : நான் சொன்னது டெவில்பூ, வில்லேஜ்களேப் பற்றிச் சொன்னேன். அதில் ஒன்றும் குழப்பம் இல்லே. அவர்கள் சொல்கிருர்கள். ஏன் வாங்கிக் கொள்ளக்கூடாது? ஏன் வாங்கிக் கொள்ளக்கூடாது என்ருல் மறுபடியும் அரசியல் காரணத்திற்குத்தான் அவர்கள் இன்றைக்குப் பயன்படுத்துகிருர்கள். வறட்சி நிவாரணத்திற்குப் இவ்வளவு பணம் தந்தோம் என்று அறிவித்துவிட்டு ரட்டத தொகையில் ரகசியமாகக் கழித்துக் கொள்கிருர்கள். அதற்காகத்தான்

வேண்டாம் என்று சொல்கிறோம். திட்டத் தொகையில் கழித்துக் கொள்ளக்கூடாது, திட்டத்திற்கு அப்பாற்பட்ட செலவாக வறட்சி நிவாரணச் செலவுகள் நடைபெற வேண்டும் என்பது நம் கொள்கை. அது சுப்பிரமணியம் விவகாரத்திற்குப் பிறகு வகுத்த கொள்கை அல்ல. மார்ச் 1-ம் தேதி நம் வரவு செலவுத் திட்டத்தில் இந்தக் கொள்கையை வகுத்திருக்கிறோம். அந்தக் கொள்கையின் அடிப்படையில்தான் இன்றைக்கும் நின்று கொண்டிருக்கிறோம். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வேண்டுமானால் வேறு கொள்கை இருக்கலாம். அவர்களுக்கு, எப்படியும் பணம் தந்தால் போதும், அந்தப் பணத்தை வாங்கிச் செலவழிக்கலாம், திட்டம் தொலைந்தாலும் பரவாயில்லை என்று எண்ணுவார்களேயானால் அதை நாம் ஆவலோடு எடுத்துக் கொள்ள முடியாது.

நமக்கிருக்கிற ஆவல் எல்லாம் திட்டப் பணிகள் நடைபெற வேண்டும். இன்றைக்கு திட்டத்தொகையில் சேராத அளவிற்கு இயற்கையின் சீற்றத்தால் திடீரென்று வந்துவிட்ட இந்த வறட்சி நிவாரணப் பணிகள் நிறைவேற வேண்டும். அதற்குத் தனியாக பணம் வேண்டும் என்பதுதான் நம் கருத்தாகும். அந்தக் கருத்தைதான் இன்றைக்கு மத்திய அரசிடம் நாம் வலியுறுத்தி வருகிறோம். மத்திய அரசு அந்தக் கருத்தை ஒருவேளை ஏற்றுக் கொள்ளக்கூடும் என்று கருதுகிறேன்.

அதற்கிடையில் அவர்கள் அதை ஏற்றுக்கொள்ளாத அளவிற்கு தடங்கலாக உறுப்பினர்களின் வாதங்கள் இருத்தலாகாது என்று இங்கு எடுத்துக் கூறி இந்த மன்றத்தில் எடுத்துச் சொல்லப்பட்ட பல்வேறு கருத்துக்களுக்கும் நான் நன்றி தெரிவித்துக் கொண்டு, சில சில தனிப்பட்ட குறைபாடுகள் இவைகளைப் பற்றியெல்லாம் இங்கு எடுத்துச் சொல்லப்பட்டன, அவைகளை எல்லாம் அதிகாரிகள் கவனித்து ஒழுங்கு செய்வதற்கான ஏற்பாடுகள் நடைபெறும் என்று கூறிக் கொண்டு இந்த அளவில் அமைகிறேன். வணக்கம்.

திருமதி த. ந. அனந்தநாயகி : சென்ற முறை சொல்லப்பட்டது, சட்டமன்ற உறுப்பினர்களுக்கெல்லாம் ரெயில்வே பாஸ் கொடுக்கப்படும் என்று. இன்று . . . . . . . . . . . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னொரு டிமாண்ட் இருக்கிறது. அதில் கேட்கலாம்.

திரு. எம். சுரேந்திரன் : ஆறாவது நிதிக் கமிஷனில் வறட்சிகள், வெள்ளங்கள் இவற்றிற்கு நிதி வழங்குவதில் எல்லாயிடங்களுக்கும் ஒரே கொள்கை இருக்க வேண்டும் என்பதற்காக ஒரு கொள்கை வகுத்து அந்தக் கொள்கையின் அடிப்படையில்தான் நம்முடைய மாநிலத்திற்காக ஒரு கோடி ரூபாய் தந்திருப்பதாக புள்ளி விவரம் இருக்கிறது. அதை நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பிரசங்கம் வேண்டாம்.